# இராணுவ அனுமதிச் சீட்டு முறையை எதிர்த்து

விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 1 ஜுலைக்கு 9 இதழ் 156

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 17-7-1986

## பூரண ஹர்த்தாலும், வாகன ஊர்வலமும்

[ஐ. சண்முகலிங்கம்]

இராணுவ முகாமில் லொறிகளுக்கும், தனியார் பஸ்களுக்கும் அனுமதிச்சீட்டு வழங்கும் முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று யாழ். குடாநாட்டில் வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் மூடப்பட்டு போக்குவரத்து நிறுத்தப்பட்டு பூரண ஹர்த்தாலும், மாபெரும் வாகன ஊர்வலமும் நடைபெற்றது.

வடபிராந்திய லொறிச் சொந்தக்காரர்கள் சங்கமும், முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியமும், யாழ். வர்த்தக சங்கத்தினரும், மினிபஸ் சங்கத்தினரும் இணைந்து நடத்திய வாகன ஊர்வலம் நேற்று யாழ். நகரில் நடைபெற்றது.

கோப்பாய் கந்தசாமி கோயிலடியில் இருந்து நேற்று காலை 9 மணிக்கு ஆரம்பமான இவ் வாகன ஊர்வலத்தில் சுமார் 150 லொறி, மினிவான்கள்

(5ம் பக்கம் பார்க்க)

## 'பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது'

யாழ்ப்பாணம், வியாழன்.

''மாற்றாந் தாய் மனப்பான்மையிலேயே இலங்கை அரசினால் தமிழர்கள் நடாத்தப்படுகிறார்கள். லொறிச் சேவைக்கு விதிக்கப்பட்ட புதிய கட்டுப்பாடு இதற்கு உதாரணமாகும்.'' இவ்வாறு இராணுவ முகாம்களில் லொறிகளுக்கு

(5ம் பக்கம் பார்க்க)

## ● மூதூரில் நடந்த பயங்கரம்

# 22 அகதிகள் உட்பட 40 பேர் இராணுவம் சுட்டுப்பலி!

(நமது விசேஷ நிருபர்)

**மூதூர் தொகுதியிலுள்ள அகதி முகாம் ஒன்று அமைந்துள்ள பகுதியை இராணுவத்தினர் சுற்றி வளைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 22 அகதிகள் உட்பட 40 பொது மக்கள் பலியானார்கள் பலர் காயமடைந்தனர்.**

**அகதி முகாமிற்குள் இருந்து 15 ஆண்களது சடலங்களும், 7 பெண்களது சடலங்களும் மீட்கப்பட்டன.**

நேற்றுக் காலை 7 மணியளவில் இப் பயங்கரச் சம்பவம் இடம்பெற்றது.

மூதூர், தெஹிவத்தை, சேருவில ஆகிய இடங்களிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து பல நூற்றுக் கணக்கான இராணுவத்தினர் புறப்பட்டு மணல் சேனை, பச்சைநூல், பெருவெளி ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டை நடத்தினர்.

இத் தேடுதல் நடவடிக்கையின் போது இராணுவத்தினருக்கு உதவியாக ஹெலிக்கொப்டர்களும், குண்டு வீச்சு விமானங்களும் வட்டமிட்டுப் பறந்த வண்ணம் இருந்தன.

தேடுதல் நடவடிக்கைக்குட்

(5 ம் பக்கம் பார்க்க)

## இருவர் கைது

யாழ்ப்பாணம், வியாழன்

பூநகரியில் நேற்றுமுன் தினம் இராணுவத்தினர் பொதுமக்கள் இருவரைத் தாக்கி அவர்களை முகாமுக்குக் கூட்டிச்சென்றுள்ளனராம். (ஐ)

## தொண்டமானாறு — இராணுவ உயர் அதிகாரி உட்பட மூன்றுபேர் பலி

வல்வெட்டித்துறை, புதன்

தொண்டமனாறு உடைந்த பிரதான பாலத்தில் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த தொண்டமனாறு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு உயரதிகாரி உட்பட மூன்று இராணுவத்தினர் பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் காலையில் தொண்டமனாறு பாலத்தில் இராணுவத்தினர் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்தவேளையில் இச்சம்பவம் இடம்பெற்

(5 ம் பக்கம் பார்க்க)

## திடீரென வீடு தீப்பற்றியது

யாழ்ப்பாணம். வியாழன்.

யாழ்நகரில் நேற்று நண்பகல் ஸ்ரேசன் சந்தி - மாட்டின்வீதியில் உள்ள கிடுகு வீடொன்று திடீரென தீப்பிடித்து எரிந்தது.

வீட்டிலுள்ளவர்கள் அவலக் குரல் எழுப்பியபோது, அச்சமயம் கச்சேரி நோக்கிச் சென்ற வாகன ஊர்வலத்தில் சென்றவர்களில் சிலர். விரைந்து தீயை அணைத்தார்கள். இச்சம்பவம் நடந்தபோது வானத்தில் ஹெலிகொப்டர் ஒன்று பறந்தது குறிப்பிடத்தக்கது. [வி]

## இராணுவ கெடுபிடி காரணம் கொழும்புத் தபால்களை எடுத்துச்செல்ல மறுப்பு

கொழும்பு, வியாழன்

நேற்று முதல் கொழும்பு செல்லும் வடபகுதி தபால் பொதிகளை அனுராதபுரத்துக்கு எடுத்துச்செல்வதை வவனியா தபால் ஊழியர்கள் நிறுத்தியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவனியாவிலிருந்து அனுராதபுரம் பஸ் மூலம் கொண்டு செல்லப்பட்ட தபால் பொதிகள் இராணுவத்தினரால் மதவாச்சிக்கு திருப்பிக்கொண்டு செல்லப்பட்டு தபால் பைகள் அறுத்து சோதிக்கப்பட்டதன் காரணமாகவே வவனியா தபால் ஊழியர்கள் பஸ்மூலம் தபால்களைக் கொண்டுசெல்ல மறுத்துள்ளனர்.

இருந்தபோதிலும் வவனியாவுக்கும்கொழும்புக்குமிடையிலான தபால் சேவைகள் நடைபெறுமென்று தெரிகின்றது. வவனியாவிலிருந்துஅனுராதபுரத்துக்கு தபால்களை பஸ் மூலம் கொண்டுசெல்ல அச்சத்தின் காரணமாக ஊழியர்கள் மறுக்கின்றனர்.

## இனப் பிரச்னை — 'மக்களின்' அபிப்பிராயத்தை அரசு அறியவேண்டும்' சிறிமா

கொழும்பு, புதன்

'இனப்பிரச்னைத் தீர்வுக்கான பிரேரணைகளை நடைமுறைப்படுத்தப்பட முன் நாட்டு மக்களின் அபிப்பிராயத்தை அரசு அறியவேண்டும்' என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா, ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கை

( 5ம் பக்கம் பார்க்க)

## தொலைதொடர்பு நிலைய ஊழியர் அனைவரும் பணிக்கு வந்திருந்தனர்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் கடமை புரியும் ஊழியர்கள் பெண்கள் உட்பட அனைவரும் பண்ணையில் உள்ள தொலைபேசி நிலையத்தில் நேற்று கடமைக்குவருகை தந்திருந்ததாகத் தெரியவருகின்றது,

பெண் ஊழியர்களில் சிலர் அங்கு கடமையாற்றுவதில் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்று கருதியபோதிலும் எவரும் அங்கு சென்று பணிபுரிய மறுப்புத் தெரிவிக்கவில்லை என்றும் அறியப்படுகின்றது.

நேற்று 10 மணிக்கு அங்கு பணியாற்றச்சென்ற ஊழியர்கள் 12மணிவரை தொடர்ந்து பணியாற்றினர். இவ்வாறு ஒரு வாரத்துக்கு காலை 9மணிக்குச் செல்வதென்றும் 12 மணி வரை அங்கு பணிபுரிவதென்றும் ஊழியர்கள் முடிவுசெய்துள்ளனர். அதன் பின்னர் அதிகநேரம் பணியாற்றுவது பற்றி முடிவுசெய்வர்.

பாதுகாப்பின்மையின் காரணமாக பெண் ஊழியர்கள் பணிக்குச்செல்ல மறுத்துள்ளனர் என நேற்று வெளியான செய்தி தவறென்று தொலைபேசி பரிவர்த்தனை பிராந்திய பொறியியலாளர் திரு. அம்பிகைராஜன் தெரிவித்தார்.

## வவனியா வரை புகையிரத சேவை

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்பிலிருந்து அனுராதபுரம்வரை தற்சமயம் போக்குவரத்தில் ஈடுபடும் யாழ்.ரயில் சேவை மிக விரைவில் வவுனியா வரை மேற்கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

வவனியாவரை இச் சேவையை நடாத்த போக்குவரத்து அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிகிறது.

எனினும் புகையிரதப்பகுதியின் அனுமதிக்காகவே காத்திருப்பதாகவும் இப்பகுதியின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில இவ்வார இறுதியில் இச் சேவை மேற்கொள்ளப்படலாமெனத் தெரியவருகிறது. (ஐ)

# ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் எண்ணத்தையே ஆயர் வெளியிட்டார்

## கொழும்புப் பிரமுகர்களுக்கு சென். பற்றிக்ஸ் பழைய மாணவர் பதில்

யாழ்ப்பாணம், வியாழன்.

''அப்பாவிப் பொது மக்கள் எப்பகுதியினரால் கொல்லப்பட்டாலும் நாம் ஆணித்தரமாகவும் திட்டவட்டமாகவும் கண்டித்து வந்துள்ளோம். அந்த வகையில் எமது ஆயர் அவர்களே உரத்த குரலில் இந்தக் கொலைகளைக் கண்டித்து வந்துள்ளவர். எமது பகுதியில் தினசரி நடந்து வரும் இப் படுகொலைகளை எமது ஆயரும் எமது மக்களும் தொடர்ந்தும் கண்டித்து வரவே செய்வார்கள்.'

இவ்வாறு யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்ப்பட்டுள்ளது. யாழ். ஆயர் அதி. வண. டாக்டர். பி தியோகுப்பிள்ளை அவர்கள் மேற்படி கல்லூரியின் பரிச

(5ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## தேவை

யாழ். நகரில் வளர்ந்துவரும் ஒரு ஹோட்டலுக்கு Stewards —Cooks தேவை. அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வருக. Old Park Chinese Restaurant 207, Old Park Road, Jaffna. C 3470

யாழ். மாவட்டத்திற்குள் சைக்கிளில் சென்று வியாபாரம் செய்யக்கூடியவர்கள் உடன் தேவை. சைக்கிள் வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது. அகதிகளுக்கு முன்னுரிமை வழங்கபபடும் நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நவாமினி, K. K. S. ரோட், யாழ்ப்பாணம். [C 3515]

## விற்பனைக்கு

கருவாடுக்கேற்ற அரைத்த உப்புத்தூள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M G M 777 K. K. S. Road, Jaffna. T. P 22611 [C 3365]

## சேவை

தட்டச்சு யந்திரம் (Type-Writers) சிறந்தமுறையில் திருத்திக் கொடுக்கப்படும். விலைக்கும் வாங்கப்படும். Fudo Enterprise. 39/17, மின்சார நிலைய வீதி, (3-ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம். (C 3507)

## வாடகைக்கு

பளையில் கண்டி வீதியில் கொம்பனி, ஸ்ரோர் சந்தோர் தொழிற்சாலை, போடுவதற்கு ஏற்ற வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு இல. 22 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (C 3485)

## WANTED

A leading private school in Jaffna requires full /part-time lecturers in Nursing Very attactive terms Apply Advt No. C 3501 C/o Eelanadu, Jaffna. (C 3501)

## தவறிவிட்டது

நாகேஸ்-நாகேஸ்வரன் என்பவருடைய 652321224 V இலக்கமுடைய அடையாள அட்டையும் சைக்கிள் பற்றுச்சீட்டும். பணிப்பேர்சுடன் வைத்தீஸ்வர சந்தியில் இருந்து நல்லூருககிடையில் தவறிவிட்டது இதை கண்டெடுத்தவர் பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். கா. நாகேஸ்வரன், மீனம்பிகை ஜவுளி சமுத்திரம், 32 மக்கள் நவீனசந்தை, யாழ்ப்பாணம். (C 3504)

ஸ்ரீரங்கநாதன், 14, குமரபுரம். பரந்தன் என்பவருடைய பஸ் லைசென்சும், இன்ஸ்சூரன்ஸ், டக்ஸ் என்பன 15-07-86 இல் யாழ். பஸ்நிலையத்தில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைககவும். (C 3502)

### மண்சுமந்தமேனியர் - 2

13.07.86 (ஞாயிற்றுக்கிழமை) அன்று 11 30 மணிக்கு நடைபெற இருந்த நாடகக்காட்சி 19-07 86 (சனிக்கிழமை) 11-30 மணிக் காட்சியாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேற்படி காட்சிக்கு நுழைவுச்சீட்டு எடுத்தவர்கள் அதே நுழைவுச்சீட்டுடன் ஒத்திவைக்கப்பட்ட காட்சியைப் பார்க்கலாம்.

C 3512 கலாசாரக்குழு, யாழ். பல்கலைக்கழகம்.

### சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வரையுள்ளது), சுன்னாகம்.

## புலமைப் பரிசிற்கு விண்ணப்பம் கோரல் 1986—1987

சுன்னாகம் ப. நோ. கூ. சங்க எல்லைப் பரப்புள் வசிக்கும் சங்க அங்கத்துவமுடைய, பல்கலைக்கழகப் பட்டப்படிப்பிற்கு தெரிவு பெற்ற பட்டப்படிப்பைத் தொடருகின்ற, வசதி குறைந்த மாணவர்கள் இருவருக்கு புலமைப் பரிசில் வழங்க சங்கம் தீர்மானித்துள்ளமையால், தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொண்டு ரூ. 5/- செலுத்தி, விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்று பூர்த்தி செய்து 28-7-86ந் திகதிக்கு முன்பதாக 'பொது முகாமையாளர், சுன்னாகம் பல நோ. கூ. சங்கம், சுன்னாகம், என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்'

பொது முகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
15-7-86. (A 936)

## காணவில்லை

யோகராசா யோகரஞ்சித் -8 வயது, பொது நிறம், 3' உயரம். தாய் பெயர்: தனலட்சுமி, தகப்பன் பெயர்: யோகராசா. கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தில் பாலர் வகுப்பில் படித்தவர். உருத்திரபுரம்காந்தி நிலைய விடுதியில் இருந்து 07-05-86 தொடக்கம் காணவில்லை. தகப்பன் வன்செயலால்இறந்துவிட்டார். தாயார் தனலட்சுமி, C/o விநாயகமூர்த்தி, பூந்தோட்டம், வவுனியாவில் இருக்கின்றார். காணாமல்போன யோகரஞ்சிதின் சகோதரிகள் செல்விகள் யோகமலர், யோகமாலா இருவரும் சருமபுரம் அன்னை கஸ்தூரிபாய் மகளிர் இல்லத்தில் இருக்கிறார்கள். தாயார் தாங்கொணு வேதனையில் தவிப்பதால் மனிதாபிமானமுள்ளோர் காணாமல்போன இம்மாணவனைப் பற்றிய தகவலை சர்வோதயம், கிளிநொச்சி விலாசத்திற்கு அல்லது காந்திநிலையம், உருத்திரபுரம் விலாசத்திற்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

சி.க. வேலாயுதபிள்ளை,
உருத்திரபுரம்.
[A 937]

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னம்மா ஆறுமுகம்
பூலோகம்: 11-9-1921
சிவலோகம்: 17-6-1986

எங்கள் குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் இறுதிச் சடங்கு ஒழுங்குகளில் உதவியவர்களுக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (17-7-1986) வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும்வீட்டில் நடைபெறும் மதிய போசனத்திலும்கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த குடும்பத் தலைவியை இழந்து ஏங்குகின்றோம். உன் திருமுகம் காண எப்பிறப்புஎடுப்போம்.

உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.
விளானை,
காரைநகர் C 3506

## உதைபந்தாட்ட போட்டி

காரைநகர், புதன்

யாழ். கல்வித்திணைக்களம் நடாத்திவரும் 17 வயது பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் அரை இறுதிப் போட்டியில் விளையாட சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி தெரிவாகியுள்ளது.

காரைநகர் தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தை நான்குக்கு பூச்சியம் கோல்களால் வென்றதன் மூலம் அரையிறுதிக்கு விளையாடும் தகுதியை பெற்றுள்ளது.

இக் கோஷ்டி வட்டு இந்துவை 6 - 0 கோலாலும் அராலி இந்துவை 4 - 0 கோலாலும் வென்றுள்ளமை குறிப்படத்தக்கது.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


## கலைப்பீட மீள் பரீட்சை, செப்டம்பர் 1986

அடிப்படைக் கணிதம், முதலாம் ஆண்டு மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் ஆகஸ்ட் 29ம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பப் படிவங்களை அதற்குரியபணத்தையும் செலுத்திப் பூர்த்தி செய்து சிரேட்ட உதவிப்பதிவாளர், தேர்வுக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் இப்பரீட்சையானது செப்டம்பர் மாதம் 22ம் திகதி நடைபெறும்.

பதிவாளர்.

[A 939]

## ஓராண்டு நினைவஞ்சலி



சிவக்கொழுந்து
சந்திரமோகன்
தோற்றம்: 27-07-1962
மறைவு: 17-07-1985

...தாயார்க்கு, தந்தைக்கு, அக்காவுக்கு, தங்கைக்கு, தம்பியர்க்கு நம்பிக்கை ஒளி சிந்தும் சந்திரனாய் நின்றாய் வித்தைகள்பல கற்று வீரனாய், விவேகியாய் விளங்கினாய். பொல்லாத காலன் நெதர்லாந்துக் கடலில் உம் உயிரைப் போக்கினானே! ஆறாது சோகம் ஒருபோதும் ஆறாது!!

உன்பிரிவால் வாடும்
கி. சிவக்கொழுந்து
குடும்பத்தினர்.
அண்ணா சிலையடி,
கரணவாய் தெற்கு.
C 3514

## சென். சாள்ஸ் முன்னணியில்

யாழ்ப்பாணம், வியா:

யாழ். மாவட்ட கல்வித் திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கிடையே தற்போது நடாத்திவரும் உதைபந்தாட்ட ''நொக்கவுட்'' போட்டியில், 17 வயது பிரிவில் யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் மகாவித்தியாலயம் முன்னணியில் நிற்கின்றது.

மேற்படி வித்தியாலயம், யாழ். வைத்தீஸ்வராவித்தியாலயத்தை 8-0கோல்களாலும், ஒஸ்மானியாக் கல்லூரியை 3-2 கோல்களாலும், கொக்குவில் இந்துக்கல்லூரியை 3-1 கோலகளாலும் வெற்றிபெற்றது குறிப்படத்தக்கது

### யாழ். இந்து வெற்றி

15 வயதுப பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி- குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தை 2-0 கோல்களாலும். கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயத்தை 1-0 கோலாலும் வெற்றிபெற்றது.

இதே பிரிவில் ஒஸ்மானியாக் கல்லூரி- யாழ். மத்திய கல்லூரியை 7-0 கோல்களால் வெற்றிபெற்றது. (வி)

## 31-ம் நாள் நினைவஞ்சலி, நன்றி நவிலல்




அமரர்
க. தில்லையம்பலம்
(பிரபல வாகன வர்த்தகர்)
தோற்றம்: 1933-07-18
மறைவு: 1986-06-17

அன்பை முதலாய் எமக்காக்கி அரிய மொழியாமஅமுதூட்டி இன்பம் இசைய வளர்த்த எங்கள் அன்புத் தெய்வமே! தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்த இந்த 31-ம் நாளில் தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

18-06 1986 அன்று நடைபெற்ற அன்னாரின மரணச் சடங்கில கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுபபியவர்களுக்கும், மலர்வளையம் சாத்திய சக பாடசாலை மாணவ மாணவிகளுக்கும், அதிபர், ஆசிரியர், அன்பர்களுக்கும் நன்றி கூறி அன்னாரின் இல்லத்தில் 17 - 07 - 86 (இன்று) நடைபெறும் வீட்டுக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

T. சிவகுமார்,
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

குமார பவனம்,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(C 3510)



மாகாணசபை திட்டத்தையும் பேச்சுவார்த்தைகளையும் எதிர்த்து யாழ். பல்கலைக்கழகத்துக்கருகில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களின் ஒரு பகுதி.

# இந்திய எல்லைப்பகுதியில் மீண்டும் சீன ஊடுருவல்?

## பீக்கிங்கிடம் கடும் ஆட்சேபம்

புதுடில்லி ஜுலை 16

கடந்த மாதம் அருணாசல் பிரதேஷ் மாநிலத்தில் சீனர்கள் அத்துமீறி ஊடுருவல் செய்திருப்பதாக இந்தியா சீனாவிடம் கடுமையான ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

**உலகச் செய்திகள்**

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான கிழக்கு எல்லைப் பகுதியில் இந்தியாவுக்குச் சொந்தமான தெற்குப்பிராந்தியத்தில் ஏழு கிலோ மீட்டர் நிலப்பரப்பிறகுள் சீன அத்துமீறிப் பிரவேசித்துள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### 40 சீனர்கள்

இவ்வாறு ஊடுருவல் செய்தவர்கள் இன்னமும் இந்திய எல்லைக்குள்ளேயே இருப்பதாகவும் இவர்களில் சிலர் சீருடையணிந்திருப்பதாகவும், மொத்தம் 40 சீனர்கள் வரையில் இருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இத்தகைய ஊடுருவல்கள் அவ்வ போது செய்யப்பட்டு வருகின்றன என்றும் இந்தப் பகுதியில் நடந்த ஊடுருவல் நடவடிக்கையிலே இதுதான் அதிக தூர ஊடுருவல் என்றும் அவர் தெரிவித்தார்.

### ராஜீவ் அமைச்சரவை ஆராய்வு

இது இவ்வாறிருக்க இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தலைமையில் இந்திய அமைச்சரவையின் அரசியல் விவகாரக்குழு நேற்று மாநாடு கூடி இந்திய சீன எல்லையில் எழுந்துள்ள புதிய நெருக்கடி நிலை குறித்து ஆராய்ந்தனர்.

### சீன பதில்

இந்திய அரசின் இந்த ஆட்சேபனைக்கு சீன பதிலளிக்கும் போது அடுத்தவாரம் பீக்கிங்கில் நடைபெறும் சீன-பாரத அதிகாரிகள் நிலைப்பேச்சுக்களில் இந்த விடயத்தை விவாதித்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக இந்திய பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் சனிக்கிழமை சீன புறப்படுகின்றது

### 7-வது பேச்சு

"இருநாடுகளுக்கு மிடையே எல்லைப் பிரச்னை குறித்து நடைபெறவிருக்கும் ஏழாவது சுற்றுப் பேச்சுக்களாக இப்பேச்சு வார்த்தைகள் அமையும் என்று தெரியவருகிறது.

"எல்லைப்பிரச்னை பற்றிய பேச்சுக்களுடன் சர்வதேச விடயங்கள், விஞ்ஞானம், தொழில் நுட்பதுறையில் இரு தரப்புத்திட்டங்கள் ஆகியன குறித்தும் இரு தரப்புக்களும் விவாதிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன - இந்தியா எல்லையில் அமைதியைப் பராமரிப்பதும் எல்லைப் பிரச்னைக்கு அமைதியான நியாயமான தீர்வொன்றைக் காண்பதுமே இப்பேச்சுகளின் பிரதான குறிக்கோள் என்றும் அறிய வருகிறது. (து)

## ஆசிரியர்களின் அளப்பரியபணி

யாழ்ப்பாணம், வியா

"பெருந்தொகையான பெற்றோர் சமுகங்கொத்திருப்பது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர் கொண்டுள்ள அக்கறையை வெளிக்காட்டுகிறது பெற்றோரின் ஒத்துழைப்புடன் பாடசாலைத் தேவைகளைப் பூர்த்தி செய்து மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதுதான் இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர்களின் அளப்பரிய பணியாகும"

இவ்வாறு சின்னமடு றோ.க. பாடசாலை அபிருவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போது பாடசாலை அதிபர் திரு. அ. லோசியஸ் கூறினார்.

நடப்பு வருட உத்தியோகத்தர்கள் வருமாறு: தலைவர்: திரு அ. அலோசியஸ், செயலாளர்: திரு ச. யோகநாதன், பொருளாளர்: திருமதி ஹரியற் ஸ்ரீபன், உபதலைவர்: திருமதி: எம். ஆர் பாலேந்திரா, உப செயலாளர்: திரு. மா டெமனபோட். செயற்குழு உறுப்பினர்கள் 16 பேர் தெரிவாகினர்.

## அஹமதாபாத்தில் மீண்டும் வன்முறைகள் 181 பேர் கைது!

புதுடில்லி ஜுலை 16

அஹமதாபாத்தில் கொள்ளைச்சம்பவங்கள், தீவைப்புகள் நேற்றிரவும் நடைபெற்றதாக தெரிய வருகிறது.

வன்முறையாளர்களைக் கலைக்க பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார். மேலும் வன்முறை நிகழாதிருக்க பொலிஸார், 181 பேரைக் கைது செய்துள்ளனர்.

நேற்று அஹமதாபாத்தின் பல்வேறு பகுதிகளிலும் பொது மக்களின் நன்மை கருதி ஊரடங்கு உத்தரவு நான்கு மணி நேரம் தளர்த்தப்பட்டது. (து)

## மாகாணசபை யோசனை: பௌத்த அமைப்பு ஆதரவு

கொழும்பு' புதன்

இனப் பிரச்சினை தீர்வு சம்பந்தமான ஜனாதிபதியின் உத்தேச மாகாணசபை யோசனைகளுக்கு அகில இலங்கை பௌத்த சாசனம் தனது மனப்பூர்வமான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

உத்தேச மாகாணசபைத் திட்டத்தை ஆராய்ந்த பௌத்த சாசனத்தினர் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த ஆதரவுதெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, இலங்கையின் ஐக்கியம் ஒருமைப்பாடு ஆகியன புதிய ஆலோசனையில் தெரிவிக்கப்பட்டிருப்பதால் சிங்கள மக்கள் அச்சம் அடையத் தேவை இல்லை என்றும், சகல பௌத்த சாசனங்களும், மகா சங்கமும் புதிய யோசனைகளுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கேட்கப் பட்டுள்ளது. (வா)

## கொழும்பில் ஊர்காவல் படை

யாழ்ப்பாணம், வியாழன்.

கொழும்பில் ஊர்காவல் படை அமைப்பதற்கான ஒழுங்குகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொழும்பிலும், கொழும்பின் பெரும்பாகப் பிரிவிலும் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்களை உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சு கோரியுள்ளது. (சிவ)

## மீனவர் இருவர் கரைதிரும்பவில்லை

பச்சிலைப்பள்ளி, புதன்

கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற உடுத்துறைவாசிகளான இரு மீனவர்கள் ஒரு வாரமாகியும் கரைதிரும்பவில்லை.

இவர்கள் இருவரும் முல்லைத்தீவுக்கும் சுண்டிக்குளத்துக்குமிடையிலுள்ள பொக்கணையென்னுமிடத்திலிருந்தே 'பிளாஸ்ரிக்' படகொன்றில் மீன் பிடிக்கச் சென்றிருந்தார்கள்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் கந்தசாமி என்பவரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இராசரத்தினம் பஞ்சலிங்கம் என்பவருமே இவர்களாவார்

இவர்களைத் தேடிச்சென்ற படகுகள் இவர்களைச் சந்திக்காத நிலையில் கரைதிரும்பியுள்ளன,

# "பிறிட்டோறியாவுக்கெதிரான தடைகள் குறித்து 'கொமன்வெல்த்' நாடுகளுக்குள் உடன்பாடு வேண்டும்"

லண்டன் ஜுலை 16

"பிறிட்டோறியா அரசுக்கெதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிப்பது குறித்து 'கொமன் வெல்த்' நாடுகளுக்குள் உடன்பாடொன்று ஏற்படவேண்டும்' என்று 'கொமன் வெல்த்' தலைமைச் செயலர் திரு. ராம்பால் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று லண்டனில் இதனை அவர் தெரிவித்தார். நடக்கவிருக்கும் 'கொமன் வெல்த்' விளையாட்டுக்களில் கலந்து கொள்ளும் விடயத்தை உறுப்பு நாடுகள் திறந்த மனத்துடன் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தென்னாபிரிக்காவிற்கு எதிராக மேற்கொண்டு பொருளாதாரதடை எதுவும் விதிக்க பிரிட்டிஷ் அரசு தயங்குவதை ஆட்சேபித்து ஐந்து ஆபிரிக்க நாடுகள் இந்த விளையாட்டு நிகழ்ச்சியை பகிஸ்கரிக்க தீர்மானித்திருப்பது தெரிந்ததே.

இதேவேளை தென்னாபிரிக்காவில் நெருக்கடி நிலை பிறப்பிக்கப்பட்டதை ஆட்சேபிக்கும் வகையில் நேற்று நடந்த வன்முறையில் மேலும் ஆறுபேர் இறந்துள்ளார்கள்.

கடந்தமாதம் 12-ம் திகதியன்று அங்கு நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது முதற்கொண்டு இதுவரையும் நடந்த வன்செயலில் குறைந்தது 140 பேர் இறந்துள்ளதாக தென்னாபிரிக்கசெய்திக்கழகம் தெரிவித்துள்ளது. (து)

**மணிவாக்கு**

புதுஉலகத்தை உண்டாக்க வல்லவர் யார்? நல்ல தாய்மார்கள்.

—நெப்போலியன்.

# நமது நோக்கு

## பகிரங்க இரகசியம்; என்றாலும் இரகசியந்தானே!

பகைத்திறந்தெரிதல் என்ற விடயத்தில் தமிழ் முனிவர் கூறும் ஆலோசனை இன்றைய உலக அரசியல் வானில் மிகவும் அவசியமானது.

அணுகுண்டால் ஏற்படக்கூடிய அழிவைத் தடுக்க, அவ்வித போரைத் தவிர்ந்த ராணுவ, அரசியல் தந்திரங்கள் திறம்பட தொழிற்பட வேண்டும்.

''நோவற்கு நொந்து அறியார்க்கு; மேவற்க மேன்மை பகைவர் அகத்து',

எங்கள் பலவீனங்களை மற்றவர்களுக்குப் பறைசாற்றுவோமானால், எங்கள் வலிமை குறைந்து விடும்.

ஜனாதிபதி மாளிகைகளில் மட்டுமல்ல, பத்திரிகைகள் தாமும், மக்கள் தனிவாழ்விலும் இரகசியம் என்று கொள்ளப்படுவதை அடக்கி வைத்தல் தவிர்க்க முடியாததாயிருக்கும். மிகக்கடினமான காரியம்; அதுவும் ஒரு பெண்ணின் காதில் அகப்பட்டால் 'குடி முடிந்திடும்' என்றொரு ஹாஸ்யக் கருத்துமுண்டு.

உலகில் நடைபெறும் நெருக்கடிச் சம்பவங்களில் இலங்கையும் உலகின் கவனத்துக்குள்ளாகி விட்டது.

சமாதானம் விரும்பும் உலகமக்களும் அவர்களின் நல்லாட்சிகளும் இன்றைய 'போர்' முடிவடைந்து இந்த அழகான நாடு முன்போல சமாதானமாக வாழ வாய்ப்புக்கிடைக்க வேண்டுமென விரும்புகின்றனர்; வாழ்த்தும் தெரிவிக்கின்றனர்.

உள்நாட்டு விடயமென்பதால் சரிபிழை சொல்லாது இருப்பினும் மலைபோன்ற கொடுமைகள், மனித அடிப்படை உரிமை மீறல்கள் இங்கு சாதாரணமாகிவிட்டதால் அவற்றை எதிர்த்து குரலெழுப்புவதோடு அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வழிவகைகளையும் சொல்லி வருகின்றன

இவற்றைத்தவிர பக்கம் சாராமை மருந்துக்கும் கிடைப்பதில்லை. மௌனமோ, சத்தமோ, நடுநிலைமையைக் குறிப்பதில்லை. வல்லரசுகளின் அண்மைக்கால வளைவு நெளிவுகள் இதனைப்புலப்படுத்துகின்றன.

உலகைக் கூறுபோடும் நேற்றோ, ஐக்கிய ஐரோப்பிய சமுதாயம், வார்சோ ஒப்பந்தங்கள் போன்ற நிறுவனங்கள் முரண்படும் போதெல்லாம் எங்கள் சிறு நாடுமட்டுமல்ல அணிசேராக் கொள்கையில் நம்பிக்கை கொண்ட, ஆனால் பலமற்ற நாடுகள் பல அவற்றின் விருப்பு வெறுப்புக்குப் பலியாகின்றன,

இந்த விருப்பு வெறுப்பு அந்நாட்டுமக்களின் நலனைப் பொறுத்ததல்ல; அங்கு ஆட்சிபுரியும் ஆள் நம்மாளாயிருக்க வேண்டுமென்பதே விடயம்.

இலங்கை- இந்திய தொடர்பிலும் இது காணப்படுகிறது. பிரதமர் இந்திரா தோல்வி கண்ட மாத்திரத்தில் இலங்கை அரசு, அகால முடிவடைந்த ஜனதா ஆட்சித் தலைவர் மொரார்ஜி தேசாயை இங்கு வரவழைத்துக் கௌரவித்ததும், பின்னர் பிரதமர் இந்திராவுடன் முரண்டிகொண்டிருந்த ஜனாதிபதி திராவிடராக இருந்தபோதும் இந்திராவின் எதிரியென்ற காரணத்தால் திரு சஞ்சீவரெட்டி இலங்கை அரசால் கௌரவிக்கப்பட்டதும் சிந்தனைக்குரியவை.

இந்து சமுத்திரப் பிரதேசம் சமாதான வலயமாக வேண்டுமென்ற பிரகடனத்துக்கு அன்று இலங்கைப் பிரதமராக இருந்த சிறிமாவோ பெரும் பொறுப்பாக இருந்தார். இன்று வரைக்கும் இந்தப் பிரகடனத்தை எதிர்த்து வரும் அமெரிக்கா சிறிமா அம்மையாரின் ஆட்சியை விரும்புமா?

பாகிஸ்தானே இந்து சமுத்திரத்தில் ராணுவ கேந்திர நிலையமாக வேண்டுமென்று தீர்மானங்கொண்ட அமெரிக்கா அதனால் இந்தியாவிற்கு என்ன பாதிப்பு ஏற்படுமென்பதை அறியாததா?

வடக்கில் பஞ்சாப், தெற்கில் திராவிடர் தொல்லை என்று நாம் கற்பனை செய்து இந்திய உபகண்டம் தலைபெடுப்பதை, ஐரோப்பிய அமெரிக்க வல்லரசுகள் தடுக்கும் ராஜதந்திரம் என்று ஒன்று உண்டென்று கொள்வது தவறா?

இன்றுபயங்கரவாதத்தை உலகிலிருந்து நீக்கும்பெரும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஜனாதிபதி றீகனுக்கு ஒரே ஒரு நம்பிக்கையான நண்பன்-நண்பி-பிரிட்டிஷ் பிரதமர் தாட்சர் என்பதனை உலகறியும் அண்மையில் றீகனின் போர்விமானங்கள் லிபியாவைத்தாக்கியதும், அதற்கு உடந்தையாக தாட்சர் இருந்ததும் அனைத்துலக அவமதிப்பையும் எதிர்ப்பையும் இவ்விருவரும் பெறக் காரணமாயிருந்தது.

நிக்கரகுவா அரசைக் கவிழ்க்க முனையும் 'பயங்கரவாதக் கெரில்லாக்களை' விடுதலை வீரர்களென்று அவர்களுக்குதவ முன்வந்த றீகன் இலங்கைத் தமிழ்ப் போராளிகளை எவ்வாறு கணிக்கிறார்? திருமதி தாட்சரைக் கேட்டால் நண்பனின் நிலை வெளிக்கும்-(பயங்கரவாதம் பூண்டோடு ஒழிக்கப்பட வேண்டும்) என்றுதான் நாம் யூகிக்கிறோம்.

இந்தநிலையில தமது நண்பன் ஜேஆரின் ஆட்சி, ஆல்போல் தழைக்க வேண்டுமென்று ஜனாதிபதி றீகன் தனிப்பட்டமுறையில் அவருக்கு எழுதிய கடிதம், இன்றைய சமரசப் பேச்சுக்கள் வெற்றியடைய வேண்டுமென்பதே! ராஜதந்திரம் அது பகிரங்கமாவதை அனுமதிக்காது.

பாகிஸ்தானில் ஸியாவையும் இலங்கையில் ஜேஆரையும் எதிர்த்து தேர்தல் வேண்டுமென்ற ஒரு புது நெருக்கடியை உண்டாக்கும் இரு பெண்மணிகளை றீகன் ஆதரிக்கமாட்டார் என்பது தெளிவு. அவர்கள் வெற்றிகண்டால் பிலிப்பைன்ஸ்போல் அதுவேறு விடயம்.

றீகனின் கடிதம் ஒருவிதமான பகிரங்க இரகசியம். இதனைமதியின்றி பிரசுரித்ததோடு, அதற்கு ஆசிரிய தலையங்கம் எழுதும் அரசின் நண்பர்கள் வள்ளுவரின் கூற்றை புரியாதபேர் வழிகளே!

# அக்டோபரில் உதயமாகும்

## கிழக்கிலங்கை பல்கலைக்கழகம்

— பேராசிரியர் ப. சந்திரசேகரம்

மட்டக்களப்பு பல்கலைக் கழக கல்லூரி, கிழக்கிலங்கைப் பல்கலைக்கழமாக 1986 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் உதயமாகுமென்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தன்நிறைவுமெற்ற பல்கலைக்கழகமே தனது தனித்துவத்தை வளர்க்க முடியும்.

பல்கலைக்கழக மானியக் குழுவின் விளம்பரத்தின்படி வணிகவியலும், முகாமைத்துவப் பீடமும், பண்பாட்டுக் கல்விப் பீடமும் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

பண்பாட்டியற்பீடத்தில் அராபிய மொழிப்பேராசிரியர் இஸ்லாமியவியற் பேராசிரியர், நுண்கலைப்பேராசிரியர், இம் மூன்று துறைகளிலும் மூத்த விரிவுரையாளர்கள் ஆகியோருக்கு மானியச்குழு விண்ணப்பம் கோரியிருப்பது போற்றத்தக்கது.

பண்பாட்டியற்பீடம் இப்பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படுவது இம்மாகாணத்தின் பண்பாட்டு உயர்வினைப்பேணிக்காக்கும்.

கிழக்கிலங்கை தமிழ்மொழி பேசும் சைவசமய, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்களை கொண்டு விளங்கும் ஒரு பண்பாட்டுச் சங்கமாகும்.

அராபிய மொழிப்பேராசிரியரும் நியமிக்கப்படும் அதே வேளையில் தமிழ்மொழிக்கும் சைவசமயவியலுக்கும், கிறிஸ்தவவியலுக்கும் இடமளிப்பதன்மூலம், இப்பல்கலைக் கழகப் பண்பாட்டியற் பீடம் நிறைவு பெறும் தமிழ்த் துறைப் பேராசிரியர் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும்.

கிழக்கிலங்கை வரலாற்றை எடுத்துப்பார்ப்போமானால், இது தமிழ் சைவப் பாரம்பரியம் நிறைந்த பிரதேசமாகும். வரலாற்று ஆசிரியர்களும், தமிழறிஞர்களும் இலங்கையில் திருகோணமலைப் பிரதேசத்திலேயே கூடிய சைவக்கோயில்கள் இருந்ததெனக் கொள்வர் இஸ்லாமிய அறிஞர்களினதும், கிறிஸ்தவ அறிஞர்களினதும் தொண்டும் போற்றத்தக்கது.

சைவசமய, இல்லாமிய கிறிஸ்தவப் பண்பாடுகள் மூலம் சமரசம் கண்டது கிழக்கிலங்கையின் சிறப்பாகும். கடந்த 500 ஆண்டுகளாகக் கிழக்கிலங்கை பேணிவந்த பாரம்பரியம் இது. இப்பாரம்பரியத்தைப் பேணிக்காப்பது கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தின் சீரிய பணியாகும்

எனவே, பல்கலைக்கழக மானியக்குழு, விளம்பரத்தினை மறுபரிசீலனை செய்து உடனடியாகத் தமிழ்த்துறை, சைவசமயவியல்' கிறிஸ்தவவியல் போன்ற துறைகளை உருவாக்குதல் வேண்டும். தமிழ்த்துறையில்லாது, கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம், பண்பாட்டுச் சோலை ஆவதற்குப் பதிலாக பாலைவனமாகிவிடும்

மானியக்குழு அறிஞர்களும் இந்நாட்டு அறிஞர்களும் சிறப்பாக கிழக்கிலங்கை மக்களும் இதனையிட்டு உடனடியாகச் சித்தித்து செயற்படவேண்டும்.

இப்பல்கலைக்கழக போதனா மொழிக் கொள்கை செயற்படுத்தப்பட முடியாததொன்று நுண்கலைப்பிரிவினைப் பொறுத்த வரையில் தமிழ்மொழியிலேயேகட்டாய போதனா மொழியாகவிருக்க வேண்டும்.

# நகர அபிவிருத்தி தொடர்பாக சனசமூக நிலையங்கள் ஆலோசனை தெரிவிக்கலாம்

## ஆணையாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகளையிட்டு நகர எல்லையுள் இயங்குகின்ற சனசமூக நிலையங்கள் தங்கள் ஆலோசனைகளைத் தெரிவிக்கவேண்டும். இவ்வாறு சனசமூக நிலையங்களின் சமாஜம் நடாத்திய கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வீ. கே சிவஞானம் குறிப்பிட்டார்.

சமூக அபிவிருத்தியதிகாரி திரு ஆ. இரகுநாதன் தலைமையில் நல்லூர் இந்துவிடுதியில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஆணையாளர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

உங்கள் பகுதிகளில் செய்யப்படவேண்டிய அபிவிருத்திகள் பற்றி நீங்களே அறிவீர்கள். சனசமூக நிலையங்கள் அவ்வப் பகுதி மக்களின் சபையாக இயங்குகின்ற காரணத்தால் சனசமூக நிலையங்களில் நிர்வாகிகளாக இருப்பவர்கள் தான் தத்தம் பகுதி அபிவிருத்திகளில் கவனம்செலுத்த வேண்டுமென்றார்.

சனசமூக நிலையங்களின் சமாஜத்திற்குப் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பெற்றனர். தலைவர், கலாநிதி. சு. மோகனதாஸ் உபதலைவர்: திரு. தி. தாதியஸ் செயலாளர்: திரு. இ தவகோபால் உபசெயலாளர் திரு. ஆ மாட்டீன் பொருளாளர் திரு. அ. தங்கராசா 11பேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர், [ஐ]

## பொருட்காட்சி

வேலணை, புதன்

சரவணை சின்னமடு றோ. க. பாடசாலையின் பொருட்காட்சி எதிர்வரும் 19 ம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## "தமிழ் மக்கள் எதை இழப்பினும் கல்வியை இழக்கக் கூடாது"

யாழ்ப்பாணம், வியாழன்

''இன்று நாம் ஓர் இருள் சூழ்ந்த காலத்தில் வாழ்கின்றோம். எனது காலத்தில் மட்டுமல்ல எனக்கு வழிகாட்டியாகவும் குருவாகவும் இருந்த முன்னைநாள் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை காலத்தில் எவ்வாறு இன்னல்கள் மத்தியில்கல்விப் பணி தொடர்ந்ததோ அதைப் போன்று நானும் தொழிற்படுவேன்.''

இவ்வாறு வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் புனிதர்சாள்ஸ் மகா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுனர்ப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கூறினார்.

மேலும் தமதுரையில் ''இறைவனின் அருளால்தான் யாழ்ப்பாணத்தில் கல்வித் திணைக்களமும், பாடசாலைகளும் இயங்குகின்றன. இன்றைய நிலையில் தமிழ் மக்கள் எதை இழப்பினும் கல்வியை இழக்கக்கூடாது. கல்விச் செல்வமே எமது மேலான செல்வம். நற்பிரசைகள் உருவாகுவது கல்வியின் மூலமே எமது மாணவர் கல்வியோடு நின்றுவிடாது நற்குணம், நல்லொழுக்கத்துடன் கூடிய வீரமாணவர்களாகவும் திகழ வேண்டும். அதற்கு இத்தகைய விளையாட்டுப் போட்டிகள் பெரும் பங்கை வகிக்கின்றன'' எனக் கூறினார்.

இவ்விளையாட்டுப் போட்டியில் ''தனிநாயகம்'' இல்லம் முதலாவது இடத்தையும், ''வீரமா முனிவர்'' இல்லம் இரண்டாம் இடத்தையும், ''ஞானப்பிரகாசர்'' இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றன. [வி]

## உதவி அரச அதிபராகப் பதவி உயர்வு

வேலணை, புதன்

வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நிர்வாக அதிகாரியாக கடந்த இருவருடங்களாக கடமையாற்றிவந்த திரு. துரையப்பா அரியரட்டினம் இம் மாதம் முதல் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக பதவிஉயர்வு பெற்றுள்ளார்.

கொழும்பில் பொலிஸ் தலைமையகத்தில் சுமார் 15 வருடங்களுக்கு மேலாக பிரதம லிகிதராகக் கடமையாற்றியுள்ள இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார்.

# ஒடுக்கப்படும் தமிழ்மக்களின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளிப்பு விழாவில் நிகழ்த்திய உரையைக் கண்டித்து கொழும்புப் பத்திரிகைகளில் சுதந்திர கத்தோலிக்க ஸ்தாபனத்தைச் சேர்ந்த திருவாளர்கள்ஜே ரி டி.விவேராவும்வால்டர் ரூபசிங்காவும் எழுதியிருந்த பகிரங்கக் கடிதத்துக்குப் பதில் அளிக்கு முகமாக மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

''ஆயர் அவர்களின் கருத்தில் பொருள் இல்லையென்றும் உண்மையில்லையென்றும் நீங்கள் குறிப்பிட்டதிலிருந்து வடக்குக் கிழக்கில் நடப்பவை பற்றிய உங்களின் அறியாமை வெளிப்படுத்துகிறது. இப் பிரதேசங்களுக்கு அப்பால் வாழும் உங்களைப் போன்ற அனைவரும் அரசு ஊளவாளர்களாலும், 'லங்கா புவத்' போன்ற செய்தி முகவர்களாலும் அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள தொடர்பு சாதனங்களாலும் திரித்துக் கூறப்படும் செய்திகளை உண்மையென்று நம்பி ஏமாந்து போகிறீர்கள்.

ஆயர் அவர்கள் வெளியிட்டுள்ள கருத்தினை அன்றைய கூட்டத்தினர் எழுந்து நின்று பாராட்டியமையும், உள்ளூர் பத்திரிகை ஒருமித்து வரவேற்றமையும் இப்பகுதியில் நடக்கும் சம்பவங்களை நேரில் பார்த்தும் அனுபவித்து வரும் மக்கள் அங்கீகரிக்கிறார்கள் என்பதற்குப் போதுமான ஆதாரமாகும்.

இப் பகுதியில் தற்காப்பு இல்லாத பொது மக்கள் பாதுகாப்புப் படைகளினால் கொல்லப்படுவதென்பது தினசரி சம்பவங்கள் என்பதை நீங்கள் நம்பமாட்டீர்கள். தீவிரவாதிகளுக்கும் அரசபடையினருக்குமிடையில் நடக்கும் சண்டைகளின் நடுவில் சிக்கிக் கொள்கின்றவர்கள் அவர்கள் அல்ல இவர்கள். ஆயுதப் படையின் மனம் போனவாக்கில் வீடுகளை நோக்கியும் பொது இடங்களிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள். தமது முகாம்களுக்குள்ளிருந்து மோட்டுப் வானத்திலிருந்தும் ரொக்கட்டுகள், ஷெல்களை குடிமனைகள் இருக்கும் பகுதியை நோக்கியும் ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்களை நோக்கியும் ஏவுகிறார்கள் இந்த புத்தியற்ற கண்மூடித்தனமான செயல்களால் அமைதி விரும்பும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் தம் உயிர்களை இழக்கிறார்கள் இதை நம்புவது உங்களுக்குக் கஷ்டம் ஆனால் உண்மை

நீங்கள் ஆயரை வந்து கொழும்பில் தமிழர்கள் சிங்களவர்களுடன் பாதுகாப்பாகவும், அமைதியாகவும்வாழ்வதைவப்பார்க்கும்படி கேட்கிறீர்கள். நாம் உங்களைக் கண்டிக்கிறோம். யாழ்ப்பாணம்வந்து அங்குள்ள அமைதியை விரும்பும் பாதுகாப்பற்ற தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் பயந்து கொண்டு வாழ்கிறார்கள் என்பதையும் நேரில் பாருங்கள் இப்பகுதி மக்களின் வாழ்க்கை தேவைகளுக்கான சேவைகளையும், உணவு விநியோகத்தையும் தேவையற்ற அபாயத்துடன் அரசாங்கம் மேற்கொண்டுவருகாக நீங்கள் கூறியுள்ளீர்கள். இதில் அரசாங்கம் எங்களுக்கு ஏதோ சலுகை செய்வது போலவும் அதன் கடமையல்லவென்பது போலவும் உங்கள் கூற்று உள்ளது. இதனை நாங்கள் முற்றாக ஏற்றுக்கொள்ளமுடியாது. ஏனென்றால் எமது மக்கள் தமது அத்தியாவசிய பொருள்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தப்பட்டுள்ளதென்பதையும், தனியார்துறையினர் எவ்வளவு கஷ்டத்துடன் இப்பொருள்களை கொண்டுவந்து தருகிறார்கள் என்பதை அறிவோம்.

க. பொ. த பரீட்சைகள் வெற்றிகரமாக நடைபெற்றமைக்கு ஆயுதப்படையினர் பரீட்சை நிலையங்களி இல்லாமல் இருந்ததே காரணம். எமது மக்களை பாதுகாக்கவே ஆயுதப்படை அனுப்பப்பட்டதாக அரசு கூறிக்கொள்கிறது ஆனால் இங்குள்ள மக்களைப் பொறுத்தவரை அவர்கள் கொலைபுரிந்து வருகிறார்கள். கொலைகாரர்களாகவும், சொத்துக்களை அழிப்பவர்களாகவும் அவர்கள் காணப்படுகிறார்கள். இந்த நிலைமையில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்கான முயற்சியே எடுக்கப்படுகின்றது என அவர்கள் முடிவுசெய்வதில் தவறிருக்குமா?

ஆயுதப்படையினர் தீவிரவாதிகளைத் தேடுவதாகக் கூறிக் கொண்டு தமது நடவடிக்கைகளை அதிகரித்துள்ளார்கள். கொலைசெய்வது; தீயிடுவது; கொள்ளையடிப்பது, களவெடுப்பது இவர்களின் நடவடிக்கையாக இருப்பதை மக்கள் கண்டு வருகிறார்கள். வீட்டில் சாய்மனையில் அமர்ந்திருக்கும் உங்களால் இவற்றை நம்புவது கடினம். இந்நிலைமையில்இப்பகுதி மக்கள் உதவிகோரி குரல் எழுப்பவேண்டியவர்களாய் உள்ளனர் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரின் கழுத்தை நெரிக்கும்போது சிறுபான்மையினர் வலியின் காரணமாகவும், உதவிக்காகவும் வாய்விட்டுக் கத்தத்தான் வேண்டும். அந்தவகையில் நசுக்கப்படும் சிறுபான்மை மக்கள் பேராயரின் குரல்மூலமாக தமது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் எண்ணத்தையே பேராயர் வெளியிட்டுள்ளார்

வடக்கிலுள்ள சகல சமூகத்தினர்களும் யாழ். ஆயர் அதிவந் பி தியோகுப்பிள்ளை அவர்களை மிக உயர்ந்த நிலையில் வைத்து மதிக்கிறார்கள். அவரை தனிப்பட்ட மனிதராகவல்ல தமது சொந்த உயிருக்கு ஆபத்து ஏற்பட்டபோதிலும், உண்மையை மதித்து அச்சமின்றிக் கருத்து வெளியிடும் பலமுள்ள ஒரு சிறந்த தலைவராக கருதுகிறார்கள்.

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும்

**அமரர் உயர்திரு. வே. புவிஈஜசிங்கம்**

[கப்பல் மேற்பார்வையா-ளர் கப்பல்துறை, கொழும்பு]

தோற்றம்: 19-01-1928

மறைவு: 18-06-1986

அன்பின் திருவுருவாய், அறிவின் ஒளிச்சுடராய் பண்பின் இருப்பிடமாய், பலரும் மதித்திட்ட எங்கள் குலவிளக்காய் திகழ்ந்த அமரர் புவிஈஜசிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய நாளை [18-7-86] நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம

18-06-86 நடைபெற்ற அன்னாரின் மரணச்சடங்கு, ஈமைக்கிரியைகளில் கலந்து கொண்டோர்க்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய நண்பர்கள் உறவினர்கட்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ள இவ்வேளையில் பல உறவினர்கள், நண்பர்களுக்கு அன்னாரின் மரணச்சடங்கன்று அறிவிக்க முடியாதமையிட்டு மனம்வருந்துகிறோம்.

துயருறும் அமரரின்
குடும்பத்தினர்,
மகன் கிருசாந்த்.

தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை.

C 3019

---

**லிடோ**
காலை 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ் சரிதா நடித்த
**மௌனகீதங்கள்**
(கலர் - புதிய பிரதி)

**வெலிங்டன்**
10-30, 2-30, 4-30, 6-30 P-M
முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.
**VENOM**
Action - Thrill

---

## மனையியல் கண்காட்சி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். கிறிஸ்தவ மகளிர் முன்னணியால்நடாத்தப்படும் மனையியல்கண்காட்சிநாளையும் சனிக்கிழமையும் யாழ் றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது

நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை பரிசளிப்பு விழாவும் நடைபெறும்.

---

## இன்று ரதோற்சவம்

யாழ்ப்யாணம், வியாழன்

சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தான ரதோற்சவம் இன்று நடைபெறுகிறது. நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும். [வா]

---

## வவனியாவுக்கு அரிசி, மா, சீனி

வவனியா, புதன்

வவனியாப் பகுதிக்குத் தேவையான உணவுப் பொருட்கள் நேற்று கொழும்பிலிருந்து ரயில்மூலம் கொண்டுவரப்பட்டன.

2900 மா மூடைகள், 2500 அரிசி மூடைகள், 1760 சீனி மூடைகள் நேற்று இறக்கப்பட்டுள்ளன.

---

## விளக்கம் கோரப்படும்

கொழும்பு, புதன்

போராளிகளைக் கைதுசெய்யும் முயற்சியின்போது பலியான பொதுமக்கள் குறித்து இராணுவ அதிகாரிகளிடம் விளக்கம் கோரப்படவுள்ளது

இனப்பிரச்னை தொடர்பாக ஜனாதிபதிஜெயவர்த்தனவுடன் நேரடிப் பேச்சுக்கள் நடத்தி வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியிடமே மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. [பி]

---

## கிருமி நாசினிகளே நச்சு மரணங்களுக்குக் காரணம்

கொழும்பு, புதன்

இரசாயனப் பொருட்கள் என்ற போர்வையில் அபாயகரமான கிருமிநாசினிகள் இறக்குமதிசெய்யப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனைசெய்யப்படுவதே நாட்டின் பெரும்பாலான நச்சு மரணங்களுக்குக் காரணமென கொழும்பு மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

84ம் ஆண்டில் நடந்த நச்சு மரணங்களில் 67 சதவீதமனவை இந்தக் கிருமிநாசினிகளை உட்கொண்டதால் விளைந்தவை எனவும், இந்த மரணங்களில் 74 சதவீதமானவை தற்கொலை மரணங்களெனவும், மரணமுற்றோரில் 47 சதவீமானோர் 21-30 வயதுக்குட்பட்டோர் எனவும் அவர் தெரிவித்தார்.

---

## பொருள்களுக்கு ..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

போக்குவரத்து அனுமதிப்பத்திரம் பெறவேண்டும் என்ற முறையை எதிர்த்து லொறி உரிமையாளர்கள், முஸ்லிம் ஒன்றியம், மினிபஸ் உரிமையாளர்கள் நடாத்திய வாகன ஊர்வலம் யாழ். செயலகத்தில் முடிவு பெற்றதும் நடைபெற்ற கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய திரு. எஸ். அழகானந்தம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் 'ஒரு நாளைக்கு கொழும்பு யாழ். போக்குவரத்தில் சுமார் 150 மேற்பட்ட லொறிகள் ஈடுபட்டு வந்தன. ஆனால் இன்று 10 லொறிகள் மட்டுமே கொழும்புக்குப் போய் வரக் கூடிய நிலையில் உள்ளன. இதனால் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருள்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது'' என்றார். (ஐ)

---

## இராணுவ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

பங்கு கொண்டன.

சுமார் ஒருமைல் நீளமான இந்த ஊர்வலம் கோப்பாய் கந்தசாமி கோவிலடியிலிருந்து புறப்பட்டு பருத்தித்துறை வீதி வழியே வந்து ஆனைப் பந்தி சந்தியால் நாவலர் வீதியை அடைந்து அங்கிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக, ஸ்ரான்லி வீதி, பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதிகளினூடாக சுமார் 10 மைல் தூரம் சென்று யாழ். செயலகத்தை நண்பகல் ஒரு மணிக்கு வந்தடைந்தது.

யாழ். செயலகத்தை வந்தடைந்ததும் அங்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது. இறுதியில் யாழ். அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கத்திடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

'பாஸ்' முறையை ரத்துச் செய்' 'பழைய முறையில் அனுமதிப் பத்திரம் வழங்கு', போன்ற பல சுலோக அட்டைகள் லொறிகளில் காணப்பட்டது. மினிவான்களிலும். லொறிகளிலும், ஆண், பெண்கள் நிரம்பி வழிந்தபடி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டுறவுச் சங்கங்களின் லொறிகளும் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டன.

இவ் வாகன ஊர்வலத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்திலுள்ள சகல வர்த்தக ஸ்தாபனங்கள், சந்தைகள் யாவும் மூடப்பட்டு வெறிச்சோடிக் கிடந்தன.

யாழ் செயலகம் உட்பட சகல அரசு கூட்டுத்தாபனங்கள், தனியார் நிறுவனங்கள் எதுவும் நடைபெறவில்லை பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை, யாவும் ஸ்தம்பித்த நிலையில் காணப்பட்டன. [ஐ]

---

## தொண்டமா...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

றது. பலியானவர்களையும்,படுகாயமடைந்தவரையும் உடனடியாக ஹெலிக்கொப்டரில் கொண்டுசென்றதாகவும் அறியப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து தொண்டமனாறு இராணுவ முகாமிலிருந்து பல தடவைகள் 'ஷெல்' ஏவப்பட்டதன் விளைவாகப் பொதுமக்களில் ஒரு பெண் உட்பட இருவர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை வல்வை முகாமிலிருந்து பல இராணுவத்தினர் வெளியேவர முயன்றபோது விடுதலைப் புலிகள் சிலிண்டர், கைக்குண்டுகள், துப்பாக்கிகள் கொண்டு க்டுமையாகத் தாக்கி அவர்களை முன்னேறவிடாது தடுத்தனர்.

---

செட்டிகுளத்தில்

## மூன்று குண்டுகள் வெடித்தன

வவனியா, புதன்

வவனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பகுதியில் நேற்றுக்காலை 3 குண்டுகள் அடுத்தடுத்து வெடித்த சத்தங்கள் கேட்டன.

---

## 22 அகதிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட பகுதியிலுள்ள அகதிகள் முகாம் ஒன்றுக்குள் நுழைந்த இராணுவத்தினர் அங்கிருந்த அகதிகளை நோக்கி துப்பாக்கிகளால் சுட்டனர். கிராமப்புறங்களிலுள்ள வீடுகளுக்குள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இச் சம்பவங்களால் சிறுவர்கள், பெண்கள், ஆண்கள் உட்பட 40பேர் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர். மேலும் பலர் அச்சமடைந்து காட்டுப் பக்கம் ஓடிஒளிந்து கொண்டனர்.

இதுஇவ்வாறிருக்க இப்பகுதியில இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையே கடும் நேரடி மோதல் இடம் பெற்றதாகவும் இம்மோதலின்போது இராணுவத்தினர் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (மா)

---

## தராதரப்பத்திர ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு

யாழ்ப்பாணம், வியாழன்

தராதரப்பத்திர ஆசிரியர்களுக்கான ஐம்பது ரூபா சம்பள உயர்வை கல்வி அமைச்சு இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் வழங்க தீர்மானித்துள்ளது.

தயாரட்ண ஊதிய குழுவினரிடமிருந்து சம்பள உயர்வுப்படி எதுவும் பெறாத ஆசிரியர்களுக்கே இச்சம்பள உயர்வு வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதம் 50 ரூபாபால் அதிகரிக்கப்படவுள்ள இச்சம்பள உயர்வு அடுத்தமாதம் முதல் கடந்த ஜனவரியிலிருந்து யூலை வரைக்குமான உயர்வுப்படியுடன் சேர்த்து வழங்கப்படுமென கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ் உயர்வுப்படியினை நாட்டில் 25,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பெறுவாரென தெரியவருகிறது. [சிவ]

---

## நோன்பதிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வியாழன்

இ. மு. எ. ச யாழ் கிளையின் நோன்மதிக் கருத்தரங்கு எதிர்வரும் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை இலங்கை ஆசிரியர் சங்க பண்டபத்தில் பேராசிரியர் நந்தி தலைமையில் நடைபெறவுள்ளது

இக் கருத்தரங்கில் இலக்கிய சர்ச்சைகள் பற்றி திரு. இ. முருகையன் உரையாற்றுவார். (சிவ)

---

## இனப்பிரச்னை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யொன்றில் கேட்டுள்ளார்.

அரசியல் கட்சிகளின் மகாநாட்டில் பங்குபற்றுமைக்கும் பாகாண சபையே சனைகளை நிராகரித்தும் திருமதி பண்டாரநாயக்கா பத்துப்பக்கங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்தார்.

திருமதி பண்டாரநாயக்காவின் அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி அவருக்கு நேற்று அனுபபிய கடிதத்தில் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவது சம்பந்தமாக 1989ம் ஆண்டு நான் அதனை எனது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வேன் என்று கருத்து வெளியிட்டுள்ளார். (வா)

# கொப்பரு தேவை

வாங்குமிடம்:

சோதி ஸ்ரோஸ்

கோண்டாவில் சந்தி.

[A-791]



# பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி

★ பிரான்ஸ் ★ கனடா

நேரடியான உடனடிப் பிரயாணம்

நாளுக்கு நாள் பயணமாகிக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

குவைற்

டிரைவர்[Driver] பணிப்பெண்

சவுதி அரேபியா

கிளினேர்ஸ்

உடனடி பிரயாண ஒழுங்கு செய்துகொடுக்கப்படும். அத்துடன் பாஸ்போட், பொன்ட், விசா, ரிக்கட்டிங் என்பனவும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

Group Atlantic Travels

163, HOSPITAL, ROAD,
JAFFNA.

(A797)



# பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க்,

★ கனடா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

உடனடியாக எமது காரியாலயத்தில் பதிவுசெய்துகொள்ளவும்.

★ சவுதிஅரேபியா

கிளினேஸ்க்கு பிரயாண ஒழுங்குகள் 20 நாட்களுக்குள் செய்து கொடுக்கப்படும்.

(i) வைத்தியசாலை
(ii) விமான நிலையம்
(iii) தொலைத் தொடர்புத் திணைக்களம்

மற்றும்:-

★ லிபியா ★ குவைற்

★ டுபாய் ஆகிய நாடுகளுக்கும் உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

அத்துடன்

பாஸ்போட், பொண்ட், விஸா, ரிக்கற்றிங் என்பன உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:-

யூனிவேர்சல் ஏஜென்சிஸ்,

125 (455), ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(பெற்றோலியம் கூட்டுத்தாபன முன்பாக, ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமை.)

(A 796)


# இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 1 (1986-07-17)
கிழமை- வியாழன்
திதி- ஏகாதசி பி.இ வரை
நட்சத்திரம்- விசாகம் மு.ப. 10.05ன் மேல் அனுசம்

மேடம்; ஏமாற்றத்தின் அறிகுறிகள் காணப்படும். பெரியவர் ஒருவருடன் கருத்து வேற்றுமை உருவாகலாம் நாவடக்கம் வேண்டும்.

இடபம்: புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலைதூக்கும் புத்திரர்களாலும் புகழும் கிடைக்கும். இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் இனிமை தவழும்.

மிதுனம்: சிறு விடயங்கூட இன்று சிரமயாகத் தோன்றும். உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும். வாய்வுப் பதார்த்தங்களை தவிர்த்துக் கொள்ளவும்.

கடகம்: தக்க சமயத்தில் முதியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும் தெய்வ நம்பிக்கை மேலிடும். நினைத்ததைச்சாதிப்பதில் முன்னணியில் நிற்பீர்கள்.

சிங்கம்; தொழில்துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கு இடமுண்டு. புதிய முதலீடுகளைப் பின்போடவும். நண்பரொருவரின் கடிதம் வேதனையைத் தரலாம்.

கன்னி: பொருள் வரவில் புதிய திருப்பம் ஏற்படும். வெளியிடத்துச் செய்தியும் கிடைக்கும். பணவரவிற்கும் இடமுண்டு.

துலாம்: சிறிய விடயத்தில் கூட அதிக ஆத்திரப்படலாம். பலவழிகளிலும் பணம் செலவாகும். சிலர் அவப் பெயருக்கும் ஆளாகலாம்.

விருச்சிகம்: இன்று உடல் நலம்சிறிது பாதிக்கப்படலாம். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும். கடமையாற்றும்இடத்திலும் கவனம்வேண்டும்.

தனுசு: கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாமல் வேதனைப்படுவீர்கள். மற்றவர்களின் ஏளனப் பார்வைக்கும் ஆளாகலாம். பணத்துடன் பழகுபவர்கள் அவதானம்வேண்டும்.

மகரம்: பிரச்னைகள் பல வந்துகுவியும். எதிலும் நல்ல முடிவை எடுக்க முடியாது திகைப்பீர்கள். சகோதரி ஒருவரின் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

கும்பம்: விளைபொருள் விருத்தியுடன் விருந்துக்கும் இடமுண்டு. தாய்வழி தனவரவிற்கும் இடமுண்டு. புதியதிட்டங்களும் உருவாகும்;

மீனம்: நீண்டநாள் பகை இன்றுநிவர்த்தி. களஸ்திரவழியாலும் மகிழ்ச்சியுண்டு. காதலர் வாழ்வில் பிணைப்புக்கள் இறுகும்.

திருமலை ரவீந்திரன்

# வடக்கு- கிழக்கிற்கு புதிய அமைய ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம்,வியா: வடக்கு, கிழக்கில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறையை நீக்குமுகமாக அமைய ஆசிரியர்களை சேவைக்கு அமர்த்த புனர்வாழ்வு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத் தீர்மானத்தின்படிசம்மந்தப்பட்ட பாடசாலைகளுக்கருகில் வசிக்கும் ஆசிரிய நியமனத்துக்குரிய கல்வித் தகைமையுடையவர்களுக்கு அல்லது தற்போது பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு அமைய அடிப்படையல் இந்நியமனம் வழங்கப்படும்.

இவர்களை கல்விப் பணிப்பாளர் தெரிவு செய்ய, சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர்கள் அங்கீகரிப்பர் என்றும் இவர்களுக்குரிய சம்பளத்தை புனர்வாழ்வு அமைச்சே வழங்குமென்றும் அமைச்சின் செயலாளர் திரு. ஒஸ்டின் பெர்ணண்டோ தெரிவித்தார்.

(சிவ)

## பாவற்குளம் கொலைகள்:

# இறந்தோரில் 9 பேரின் சடலங்கள் ஆஸ்பத்திரியில்

வவனியா, புதன்

பாவற்குளம் 10ம் யூனிட் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியானவர்களுள் 5 ஆண்களதும்4 பெண்களதும்சடலங்கள் நேற்றுமுன்தினம் இரவு முதல் வவனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த 9 பேரின் சடலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சுப்பிரமணியம் வீரசிங்கம் (28 வயது விவாகம் செய்து 5 மாதம்), இவரது தாயார் பராசக்தி [48 வயது], வீரசிங்கம் என்பவரின் சகோதரிகள் இருவர். இவர்கள் இளம் பெண்கள். சண்முகம் அமிர்தலிங்கம் (16 வயது), அரியநாதன் சிறீதரன் [15 வயது] இவரின் தாயார் கன்னியாவதி [38வயது]. பியதாஸராசன்[14 வயது], 50 வயதுள்ள இன்னுமொருவரின் சடலம் அடையாளம் காணப்படவில்லை.

இச் சம்பவத்தில் வைத்திலிங்கம் என்பவரும் பலியானதாக நம்பப்படுகிறது.

கொல்லப்பட்டவர்கள் கடந்த வருடம் முதற் பகுதியில் இடம்பெற்ற இனக்கலவரத்தின்போது பாதிக்கப்பட்டு நெடுங்கேணி அகதிகள் முகாமில் இருந்தவர்கள். பின்னர் அண்மையில் அரசின் அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்தால் மீண்டும் பாவற்குளத்தில் குடியமர்த்தப்பட்டவர்கள்.

ஊர்காவல் படையினரே இப்படுகொலைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிய வருகிறது. (மா)


# ஓர் நற்செய்தி

Man Power Multi Services

வீடுகட்டுவோர்க்கும், கட்டிட ஒப்பந்தகாரர்க்கும் இதோவந்துவிட்டது. இறக்குமதி செய்யப்பட்ட நவீன இயந்திரங்களினால் உருவாக்கப்பட்ட

துவாரக்கற்கள் [HOLLOW BLOCKS]

உங்கள் கட்டிடங்களை:

★ [1] விரைவாக கட்டிமுடிப்பதற்கும்,
★ [2] செலவில் 25% இலாபமடையவும்,
★ [3] வெப்பத்திலிருந்து நிவாரணமளிக்கவும்

துவாரக் கற்களை பாவியுங்கள்.

இக்கற்களைக்கொண்டு கட்டும் கட்டிடங்களுக்கு பூச்சுத்தேவையில்லை.

உங்கள் சேவைக்கு எமது கட்டிட பொறியியலாளரை மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்புகொள்ளவும்.

Marketing Manager
Man Power Multi Services,
533, STANLEY RD,
JAFFNA.
[இராசாவின் தோட்ட சந்தி]

[C3511)




மாகாணசபைகள் திட்டத்தை எதிர்த்து கொழும்பில் நடக்கும் பேச்சுவார்த்தைகளை எதிர்த்தும் கடந்த 13ம் திகதி மருதனுமடத்திலிருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் சில காட்சிகள்.

## கல்விப் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மஸ்ர உற்தீன் பாடசாலையில் இன்று கல்விப் பொருட்காட்சியிடம் பெறவுள்ளது.

இந் நிகழ்ச்சிச்கு பிரதம விருந்தினர்களாக யாழ். வட்டாரக் கல்வியதிகாரி திரு. இ. சிவானந்தன் ஆரம்பப் பாடசாலைக் கல்வியாலோசகர் திருமதி, அ இரகுநாதன் ஆங்கில பாடக்கல்வியாலோசகர் திரு, எஸ், அருமைநாயகம் ஆகியோர்கள் கலந்து கொள்வார்கள்.

இப் பாடசாலையின் முன்னாள் அதிபர் அல் ஹாஜ் குவாஸி எம். எம், எஸ். அப்துல்காத பொருட்காட்சியைத் திறந்துவைப்பார்கள்.

### தீவுப்பகுதி மக்களுக்கு கஷ்டம்

# மண்டைதீவு இராணுவ முகாமை உடன் அகற்ற வேண்டும்

## கருத்தரங்கில் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

''மண்டைதீவு இராணுவ முகாம் உடனடியாக அகற்றப் படவேண்டும். பண்ணைப் பாதையை பாவிக்க அனுமதிக்க வேண்டும் அத்துடன் அராலிப்பாதையை விருத்தி செய்ய வேண்டும்.''

தீவுப்பகுதி மக்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஏற்பாடு செய்யப்பெற்ற கருத்தரங்கின் முடிவில் மேற் கூறப்பட்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

திரு. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு;

ஒவ்வோர் தீவிலும் மூன்று மாதத்துக்குரிய உணவு வகைகள் இருப்பில் இருக்க வேண்டும்.

நெடுந்தீவுப் படகுச்சேவை தினமும் இருபகுதியிலிருந்தும் ஆரமபிக்கப்பட வேண்டும். ஊர்காவற்றுறை காரைநகர் படகுச்சேவை நடாத்தப்பட வேண்டும். கடல் சேவைகளின் கட்டணம் மீளப்பரிசீலித்தல் வேண்டும்.

தீவுப்பகுதி மக்களின் நலன்களை கண்காணிக்க போக்குவரத்து உணவு, தபால், கல்வி, விவசயம், சுகாதாரப் கடல் தொழில், புனர்வாழ்வு என்பனவற்றுக்கான குழுக்கள் தெரிவு செய்யப்பெற்றது.

ஒவ்வோர் குழுவிலும் 9 பேர் அங்கம் வகிக்கிறுர்கள். இத்துடன் இக் குழுக்களின் பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்பெற்ற ''தீவுப்பகுதி அபிவிருத்திச் சபை'' என்ற சபையும் தெரிவு செய்யப்பெற்றுள்ளது. (ஐ)

## அச்சுவேலி புனித திரேசா முதலிடம்

அச்சுவேலி, புதன்

கோப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளிற்கிடையிலான ஆங்கில தினப் போட்டியில் யா/அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி முதலிடம் பெற்றுள்ளது. அண்மையில் யாழ். புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரியில் மேற்படி போட்டிகள் நடைபெற்றன,

# ''தோலகட்டி சம்பவம் தற்செயலானதல்ல''

## கண்டனக் கூட்டத்தில் கருத்து

அச்சுவேலி, புதன்.

''அரச படைகளால் அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அடைக்கலம் வழங்கிய கத்தோலிக்க குருமாரும். சங்கைச்குரிய சகோதரர்களும் சுட்டுக்கொலை செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளதால் அனாதைகளாகும் மக்கள் அடைக்கலம் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தோலகட்டி செபமாலைதாசர் ஆச்சிரமத்தில் புகுந்து சங்கைக்குரிய சோதரரைக் கொலை செய்த சம்பவம் தற்செயலாக நிகழ்ந்ததல்ல. இது அல்லற்படும் தமிழர்களுக்கு ஆறுதல் கூறி அரவணைத்து அன்புகாட்டும் கத்தோலிக்க திருச்சபையின் தமிழ் குருமாருக்கும் சங். சகோதரிகளுக்கும், சங். சகோதரர்களுக்கும் விடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கையாகும்''

இவ்வாறு தோலகட்டியில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சங் சகோதரர் மனுவேல் வென்செஸ்லாஸ் அவர்களின் கொலையை கண்டித்து வயாவிளான் பிரஜைகள் குழு ஒட்டகப்புலத்தில் நடாத்திய சண்டனக் கூட்டத்தில் பேசுகையில் முன்னாள் யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவரும், பத்தைமேனி இடைக்காடு பிரஜைகள் குழுத்தலைவருமான திரு ஆ. ந இராசேந்திரன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் எமது பிரதேசங்கள் நாளுக்கு நாள் அபகரிக்கப்படுகிறது. எம்மவர்கள் வகை தொகையின்றிக் கொல்லப்படுகிறுர்கள். ஆயிரக்கணக்கில் அகதிகளாக முகாம்களில் அல்லற்படுகிறுர்கள். இத்தனை துன்பங்களையும் எமது மக்கள் அனுபவிக்கும் போது நாம் எமது வேறுபாடுகளை விடுத்து மக்களின் நன்மைக்காக ஒற்றுமைப்படாதிருப்பது துரதிஷ்டமாகும்.

நாம் ஒற்றுமை பற்றி வெளியே பேசுவதுடன் நின்றுவிடாது சகலரும் ஆன்மசுத்தியுடன் இதற்காகப் பாடுபடவேண்டும். ஒற்றுமை ஒன்றே எமக்கு விடிவுதரும் என்று குறிப்பிட்டார்.

வயாவிளான் பிரஜைகள் குழு உபதலைவர் திரு எஸ் சிங்கராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வயாவிளான் பிரஜை குழுச்செயலாளர் திரு எஸ். முத்தையா, தோலகட்டி அச்சிரமத்தின் பங்குக்குரு வண. பிதா. ஸ்ரீபன் அடிகள் பத்தைமேனி இடைக்காடு பிரஜைகள் குழு பொருளாளர் திரு. தா. சிவலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

# முஸ்லிம் கல்வி மாநாடு விடுத்துள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

இம் முறை யாழ் பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 28 முஸ்லிம் மாணவர்களையும் மீண்டும் கொழும்பு பேராதனை, ருகுனு பல்கலைக் கழகங்களுக்கு உடனடியாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரி அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு ஜனுதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; தற்போது யாழ் பல்கலைக் கழகத்தில் முஸ்லிம் மாணவர்கள் கல்வி பயில விரும்பவில்லை என்பது எம்மால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று

இதேவேளை 1985 ல் உயர் கல்வியமைச்சின் பிரதி அமைச்சரையும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவையும் முஸ்லிம் எம். பிக்களையும் நேரடியாக சந்தித்து அன்று யாழ் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி அங்கு படிக்க விரும்பாத 24 முஸ்லிம் மாணவர்களையும் வேறு பல்கலைக் கழகங்களில் படிக்க வசதி செய்து கொடுத்தோம்.

எனவே இவ்வாண்டு யாழ் பல்கலைக் கழகத்திற்கு தெரிவான வைத்திய பீட மாணவர்களை வேறு பல்கலைக் கழகங்களுக்கு மாற்றுமாறு கோருகின்றோம். (சிவ)

# இந்த அகதிகளுக்கும் பங்கீட்டுப் பொருட்கள்

சாவகச்சேரி, புதன்,

கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டு யாழ் மாவட்டத்தில் விசேடமாக கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கான அரசின் பங்கீட்டுப் பொருட்களை மிக விரைவில் அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்திடம் அனுமதி பெற்று வழங்க உரிய முயற்சிகளைச் செய்வதாக கிளிநொச்சிமாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. ஸி லோகேஸ்வரன் யாழ். செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பொன்றின் போது தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த அகதிகளின் பிரச்சனைகள் தொடர்பாக அறவழிப் போராட்டக்குழு அரச அதிபரை யாழ்நகரில் சந்தித்த சமயமே. இக்கோரிக்கையை விட்டனர்.

## ''மாணவர்கள் செயற்திறன்களை வளர்க்கும் கைப்பணிகளில் ஈடுபடவேண்டும்''

### கல்விப்பணிப்பாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், வியாழன்

''மாணவர்கள் பெரிய சாதனைகளை நிலைநாட்ட வல்லவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாக இருக்காது மாணவர்கள் செயல்த்திறன்களை வளர்க்கும் கைப்பணி முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும்'' இவ்வாறு யாழ் கல்விப்பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

அளவெட்டி அருணோதயக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றிய பொழுது அவர் இவ்வாறு தெரிவித்தார்

கல்லூரி அதிபர் திரு ந. சிவபாதம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் திரு. இரா சுந்தரலிங்கம் மேலும் பேசுகையில் ''மாணவர்கள் ஓய்வு நேரங்களில் தொலைக்காட்சி பார்த்தல் போன்றவற்றில் தமது பொன்னை நேரத்தை மணணுக்காது வீட்டுத் தோட்டம் முதலிய செயற்திட்டங்களில் ஈடுபட்டு உணவு உற்பத்திகளில் ஈடுபடவேண்டும்'' என்றும் வலியுறுத்தினுர்

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக வட்டாரக் கல்வியதிகாரி பொ. சிவஞானசுந்தரம் கலந்துகொண்டார். சட்டத்தரணி மு திருநாவுக்கரசு தாபகர் நினைவு உரைநிகழ்த்தினுர். பரிசு பெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி தேவராணி சுந்தரலிங்கம் வழங்கினுர்

இப்பரிசளிப்பு விழாவில் சின்னப்பு தம்பதிகளின் புலமைப்பரிசிலும் வழங்கப்பட்டது.

கல்லூரி ஆசிரியர் திரு மு. செல்லையா நன்றியுரை நிகழ்த்தினுர். (ஐ)

## வாகனம்பற்றிய பிரச்னையில் சுமுகதீர்வு

யாழ்ப்பாணம், வியாழன்

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி பேச்சியம்மன ஆலய கொடியேற்றுவிழா எதிர்வரும் 29ம் திகதி நடைபெறவுள்ளது. அண்மைக் காலத்தின் கொடியேற்று வைபவத்தின்போது தேவி எழுந்தருளியிருந்துவரும் வாகனம் சிங்கமா இடபமா எனும் சர்ச்சைக்கு கடந்த 13ம் திகதி நடந்த விஷேட கூட்டத்தில் பொதுமக்கள் தீர்ப்பளித்தனர்

வியாகரண சிரோன்மணி பிரம்மஸ்ரீ தீ, கி சீதாராம சாஸ்திரிகள் தொடக்கம் பல்கலைக்கழக பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள், ஆலய பரிபாலன சைவக்குருமார்கள் கலாநிதிகள் அடங்கிய பேரறிஞர்களிடமிருந்து பெற்ற அறிவுரையைக் கொண்டு ஆலயபரிபாலனசபை எடுத்த தீர்மானம் நெறிமுறைச் செயலாகுமென்று திரண்டிருந்த மக்கள் கூடடம் ஏகோபித்த தம் அனுமதியை அளித்தனர்

அக் கூட்டத்தில் ஸ்ரீ. எஸ் ஈஸ்வரசர்மா அவர்கள் இக் கிராம மக்களின் தாவாள ஸ்ரீ இராஜராஜேஸ்வரியின் அம்சங்களை எடுத்து விளக்கினுர் அவ்வமயம் அரச உத்தியோகத்தர்கள் பேரறிஞர்கள் பலர் சமூகமளித்திருந்தனர். கடந்த இரண்டு வருடங்களாக நிலவிய ஓர் சிறு சந்தேகத்துக்கு தீர்வு காணப்பட்டமை ஓர் சிறப்பம்சமாகும்.

## நூல் வடிவில் வெறியாட்டு

காரைநகர், புதன்,

யாழ். குடா நாட்டில் பல பகுதிகளிலும் அரங்கேற்றிய கவிஞர் இ முருகையனின் ''வெறியாட்டு'' என்ற நாடகம் நூல் வடிவில் வெளிவரவுள்ளது

கவிஞரின் கவிதை நூலான ''அ அவர்கள்'' நூலையும் ''வெறியாட்டு'' நாடகத்தையும் நூல்வடிவில் வெளிக்கொண்டுவர தேசிய கலை இலக்கியப் பேரவை முன்வந்துள்ளதாக திரு. க தணிகாசலம் தெரிவித்தார்.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வியாழக்கிழமை 17-7-86

ஊர்காவல்படையினர் சுட்டதில்

# 'என் தாயார், சகோதரிகள், அண்ணன் துடிதுடித்துப் பலியானார்கள்!

## தப்பிய பெண் தகவல்

யாழ்ப்பாணம், வியாழன்
''எனது கண்முன்னாலேயே வீட்டு முற்றத்தில் தாயார், இரு சகோதரிகள், அண்ணர், அயல்வீட்டு வயோதிபர் ஆகியோரை ஊர்காவல் படையினர் சுட்டனர். என் முன்னாலேயே அவர்கள் துடிதுடித்து இறந்தனர்''.

இவ்வாறு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள பாவற்குளம் 10-ம் யூனிற்றில் வசிக்கும் திருமதி செல்வராசா தேவி [வயது 35] கூறினார்.

ஊர்காவல் படையினர் கடந்த 13-ம் திகதி பாவற்குளம் 10-ம் யூனிற்றில் நடாத்திய துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்து உயிர்தப்பிய இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தாயான திருமதி தேவி மேலும் கூறியதாவது:-

''17-ந் திகதி ஜீப்வண்டியில் வந்தகாக்கிஉடைதரித்த இருவரும், சாம்பல் உடைதரித்தஒருவருமாகத் எமது வீட்டு வளவினுள் புகுந்து கொண்டனர். அச்சமயம் அங்குஇருந்த அண்ணர் தனது அடையாள அட்டையை எடுத்து அவர்களிடம் காட்டினார் ஆயினும் அவர்கள் அண்ணரைச் சுட்டனர். மகனைச்சுட்டதும் தாயார் கத்திக் கொண்டு அழுதார். உடனே அவரையும் சுட்டனர். இதே சமயம் வீட்டிற்குள் ஒதுங்கி இருந்த சகோதரிகளைப்பார்த்த ஊர்காவல் படையினர் அவர்களையும் சுட்டனர்.

''சூட்டுச் சத்தம் கேட்டு அவ்விடத்தை நோக்கிஓடிவந்த 70வயதான அயல்வீட்டுவயோதிபரையும் சுட்டனர். இந்தச் சம்பவத்தின்போது எனது கையில் சூடுபட்டதும் நான் உடனேயே நிலத்தில் வீழ்ந்து இறந்தவர்போல கிடந்துவிட்டேன். ஊர்காவல் படையினர் அடுத்த வீட்டிற்குச் சென்று விட்டனர்.

எனது இரு பிள்ளைகளும் இச்சம்பவம் நடந்த நேரம் பக்கத்து வீடொன்றில் அவ்வீட்டுக்காரருடன் வீட்டறையினுள் ஒழிந்திருந்தனர். இந்த வீட்டுக்காரப் பெண் அரியநாதன் கல்யாணி வயது 30] என்பவர் தனது மகனுக்கு ஏதேனும் நடந்து விடலாம் எனஎண்ணி வயலுக்கு சென்றிருந்த மகனைத்தேடி ஓடிவந்த போது அவரையும் ஊர்காவல் படையினர் வழிமறிததுச் சுட்டனர். இச்சமயம் அங்கு ஓடிவந்த கல்யாணியின்மகன் சிறீதரனும் (வயது 14) சுடப்பட்டார். ஒழுங்கை ஒன்றினுள் இத்தாயும், மகனும் சுடப்பட்டனர். இத்தருணத்தில் அவ்விடத்தே காணப்பட்ட வைத்திலிங்கம் [வயது 38) என்பவரை ஊர்காவல் படையினர் துரத்திச் சுட்டனர். அவர் சூட்டுக் காயங்களுடன் ஓடிச் சென்ற போது தவறி கிணற்றில் விழுந்து மரணமானார்.

இச் சம்பவத்தில் திருமதி தேவியின் வீட்டு முற்றத்தில் அவரது தாயாரான பராசக்தியும் [வயது 58] அண்ணரான வீரசிங்கமும் [28 வயது] சகோதரிகளான யோகமங்களம் [16 வயது] ஜெயமணி [13 வயது] மற்றும் சின்னத்தம்பி [10 வயது] ராசன் [14 வயது] ஆகியோருமேஊர்காவல்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்,

இறந்த இவர்களுடைய சடலங்களை எரிப்பதற்காக எடுத்துச்சென்ற ஊர் மக்களில் அரியநாதன், சண்முகநாதன் ஆகிய இருவரையும் சடலங்களுடன் இராணுவத்தினர் கூட்டிச்சென்றனர் என்றும் அவர்கள் நிலைபற்றி எவும் தெரியாது எனவும் தேவி தெரிவித்தார். (ஐ)

## அரச அதிபரை சந்திப்பர்

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ் வர்த்தகர் சங்கத்தினர் இன்று காலை யாழ் அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கத்தைச் சந்திக்கவிருக்கின்றனர்

இச்சந்திப்பின்போது உணவுப் பொருட்கள் கொண்டுவருவதிலுள்ள கஷ்டங்கள்பற்றியும், பொருட்கள் விலை அதிகரிப்புப்பற்றியும் விளக்குவார்கள்.

## ஒளிபரப்பு சேவை

வல்வெட்டித்துறை, புதன்
தமிழீழ விடுதலைப் புலிகளின் பரீட்சார்த்தஒளிபரப்புசேவை கடந்த மூன்று வாரங்களாக நெல்லியடி, வல்வெட்டித் துறைப் பகுதிகளில் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் இரவு 8 மணி முதல் நெல்லியடிப் பகுதிகளுக்கும். திங்கட்கிழமைகளில் இரவு 7 மணிமுதல் வல்வெட்டித்துறை பகுதிகளுக்கும் ஒளிபரப்பப்படும் என அறிவிக்கப்படுகிறது.

## ராஜினாமா கடிதங்கள் மீளளிப்பு

கொழும்பு, புதன்
82ம் ஆண்டில் ஐ தே.க எம். பி.க்களிடமிருந்து கட்சியின் உயர்பீடத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ராஜினாமாக் கடிதங்கள் எம். பி.க்களுக்கு மீண்டும் கையளிக்கப்பட்டுள்ளன. (ய-செ]

## மரண அறிவித்தல்

### சி. க. கணபதிப்பிள்ளை

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும், Vavuniya S K. Kanapathipillai and Sons உரிமையாளருமான சி க. கணபதிப்பிள்ளை 16-7-86-ல் காலமானார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், தவயோகசிந்தாமணி பத்மநாதன், பஞ்சலிங்கம் (Germany), சுந்தரலிங்கம். (U K), சொர்ணலிங்கம் (U. K) விக்னேஸ்வரி [ஆசிரியை மூதூர்], இராசலிங்கம், சண்முகலிங்கம் [Germany) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமைக் கிரியைகள் 16 ந் திகதி புதன்கிழமை மாலை 4-00 மணியளவில் கோம்பயன் மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.
[C 3508]

### கந்தையா விசாகராஜா
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

கந்தையா மகேஸ்வரியின் அன்பு மகனும், கமலாம்பிகையின் அன்புக்கணவரும், வாசுகி, சுகாகர் (U K) உஷாராணி, சுதர்சன், பானுஸ்ரீ, தர்ஷினி, விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும். விவேகானந்தராசா (பிரான்ஸ்), பரமானந்தராசா ஆர். வி ஜி.), காலஞ்சென்ற கந்தசாமி, நேசராசா (ஜெர்மன்), திருமதி யோ செல்வரெத்தினம், திருமதி த. ரவீந்திரதாஸ் ஆகியோரின் அன்புச்சகோதரரும். பத்மநாதன் வாமதேவன் துரைராஜா, சந்திரசேகரம், மகேந்திரராஜா, இராமச்சந்திரன் ஆகியோரின் மைத்துனருமான திரு. விசாகராஜா இந்தியாவில் அகாலமரணமானார்.

தகவல்: க. பரமானந்தராஜா,
ஆர். வி. ஜி. கிளை முகாமையாளர்,
கோப்பாய்.
(C 3517)

### சோமசுந்தரம் சிவஞானம்

சங்குவேலி வடக்கு சோமசுந்தரம் சிவஞானம் நேற்றுப் புதன்கிழமை. சிவபதம் அடைந்தார். அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவனும், காசிவிஸ்வநாதன் (சேவி கிளாஸ், கொழும்பு), சிறீஸ்கந்தநாதன், அரசகுலநாதன் (ஜெர்மனி), விக்னேஸ்வரன், திருமதி முருகேசம்பிள்ளை செல்வரதி, திருமதி இராசசூரியன் இன்பரதி. பாரதி ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகேசபிள்ளை, இராசசூரியன் [சவுதி அரபியா], இரவினி ஆகியோரின் மாமனாரும், சி. அரசஇரத்தினம் (இளைப்பாறிய அதிபர்), மலேஷியாவிலுள்ள சி துரைராசா, சி. சின்னத்துரை, சி. சிங்கராசா, சி. மகேஸ்வரி [மங்களம்] ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-07-86, வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு சங்குவேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று சங்குவேலி சங்கம் புலவு மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[C 3518] சிவ. சிறீஸ்கந்தநாதன்.

## யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்த அம்புலன்ஸ்

யாழ்ப்பாணம், வியாழன்.
சுகாதார அமைச்சு யாழ். பெரியாஸ்பத்திரிக்கு அண்மையில் அனுப்பிவைத்த அம்புலன்ஸ் பழுதடைந்த நிலையிலேயே இருப்பதாகவும்அதனால் எதுவித பிரயோசனமும்இல்லை என்றும் தெரிகிறது. [ஐ]

## தொண்டமனாறு சம்பவம்

யாழ்ப்பாணம், வியாழன்.
'தொண்டமனாறு இராணுவ முகாமில் இருந்து நேற்று நண்பகல் 12மணியளவில் எம்மக்களை வேட்டையாடுவதற்காக தொண்டமனாறு பாலம் வழியாக 50க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் முகாமைவிட்டு வெளிர முயல்கையில் எம்மவர்கள் குறிபார்த்து சுட்டதில் இராணுவ தரப்பில் சிலர் கொலலப்பட்டனர். மேலும் முகாமைவிட்டு வெளிவரமுடியாத இராணுவத்தினர் முகாமினுள் இருநது மோட்டார் ஷெல்களை வெளியே ஏவினார்கள்' என்று தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

## கிழக்குச் சம்பவங்கள்: புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்
மட்டக்களப்பு மாவட்டத்தில் கொமாண்டோ பொலிசார் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட இருசம்பவங்களில் பலர்கொல்லப்பட்டும் காயமடைந்துமுள்ளதாகவும், அவர்களிடமிருந்த முதலுதவிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இச்சம்பவங்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

திருக்கோயில் இராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை 8 மணியளவில் ஜீப் வண்டி ஒன்றில் ரோந்து சென்ற ராணுவத்தினர் மீது எம்மவர்கள் 'கிறனேட்' தாக்குதல் நிகழ்த்தியதில் கொமாண்டோக்கள் நிலைகுலைந்தனர். இத்தாக்குதலால் அதில் வந்த பலர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள். இவர்களிடமிருந்து முதலுதவி பொருட்கள் பல எம்மால் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலின் போது எமதுதரப்பில் எதுவிதமான இழப்புகளும் ஏற்படவில்லை.

### கண்ணிவெடி

''காலை 10 மணியளவில் இதே ராணுவமுகாமிலிருந்து புறப்பட்ட பிறிதொருபடையினர் ஜீப் வண்டியொன்றில் அம்பாறையில் தாண்டியடியால் சென்று கொண்டிருந்த சமயம் எம்மவர்களின் நிலக் கண்ணிவெடி தாக்குதலில் சிக்குண்டதில் ஜீப்வண்டி சிதைந்தது. அதில் வந்த பலர் கொல்லப்பட்டனர், சிலர்காயமடைந்தனர். (மா)

மோட்டார் சைக்கிள்

## குண்டு வெடிப்பில் இருவர் பலி; இருவர் காயம்

மட்டக்களப்பு, புதன்
ரோந்துசென்ற ஆயுதப் படையினரின் உத்தரவுப்படி அநாதரவாக வீதியில் நின்ற மோட்டார் சைக்கிளை இயக்கிய நான்கு வழிப்போக்கர்கள் மோட்டார் சைக்கிளுடன் இணைக்கப்பட்டிந்த குண்டு வெடித்ததில் இருவர் பலியானார்கள்; இருவர் படுகாயமடைந்தனர்.

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள வெல்லாவெளியில் நேற்று முன்தினம் மாலை இச் சம்பவம் இடம்பெற்றது.

### நால்வர் பலி

இச்சம்பவத்தைத் தொடர்ந்து களுவாஞ்சிக்குடிப் பகுதியை நேற்றுக் காலை சுற்றிவளைத்த ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம்செய்ததில் நால்வர் பலியானார்கள். [மா]

## 9 சடலங்கள் அரசசெலவில் அடக்கம்

வவுனியா, புதன்
பாவற்குளத்தில் ஊர்காவல் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களுள் 9 பேரின் சடலங்களும் நேற்று அரச செலவில் அடக்கம்செய்யப்பட்டன.

வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த இச்சடலங்கள் அழுகிய நிலையிலிருந்ததால் உறவினர்கள் பொறுப்பேற்க முடியாமலிருந்தனர்.

இம்மரணங்கள் தொடர்பாக மரணவிசாரணை நடத்தியபதில் நீதவான் கொலை எனத் தீர்ப்பளித்தார். [மா]

## உதவி அரச அதிபர்கள் இடமாற்றம்

வேலணை, புதன்
வேலணைப்பிரிவு உதவி அரசாங்க அதிபராக பலவருடங்களாக கடமையாற்றிய செல்வி மைதிலி சோமசுந்தரம் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபராக இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு தாமோதரம்பிள்ளை சந்திரசேகரம் இம்மாதம் முதல் வேலணை உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## நல்லொழுக்க சம்மேளனம்

காரைநகர், புதன்
வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பொரூட் காரியாலயத்தில் தலைவர் திரு. அ. அரியரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக திரு. எஸ் சற்குணராசா பொரூட் நிர்வாகி கலந்து கொள்வார்.